# தாய்மொழி தமிழ்

## தரம் - 2

## இரண்டாம் தவணை

**2022ஆம் ஆண்டில் இழந்த கற்றல் காலத்தை மீளமைக்கும் வேலைத்திட்டம்**

Recovery Plan for Learning Loss – 2022

**முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை**

**தேசிய கல்வி நிறுவகம்**

**இலங்கை**

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான ஆரம்பக் கல்விப் பிரிவில் கற்கும் மாண-வர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல்.பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்படடுள்ளது. இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிபப்டையினை நோக்காகக் கொண்டுஅக் கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அதனடிப் படையில் ஆரம்பக் கல்வியில் 1 - 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின்

அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம்தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும்.எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்-தியாவசியமான பாடப்பரப்புகள்மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றைத் தவிர்த்து அவசியமான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இலகுவான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரமுண்டு. மாற்றங்களைச் செய்ய வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியாவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம்இங்கு உள்ளடக்க-ப்பட்டிருக்கின்றன. அத் தவணைக்குரிய பாடப்பரப்பில் உள்ள அத்தியாவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவானமுறையில் தெளிவுபடு-த்தப்பட்டு பின்னர் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.தெளிவுபடுத்தப்பட்ட செயற்பா-டுகளை வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடரப்படும் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றிணையுங்கள். கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை இலங்கை வாழ் ஆரமப்ப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

# தரம் 2 - தாய்மொழி (தமிழ்)

| அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி-கள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | ● தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.<br>● தொடர்பாடலுக்காகப் பேசுவார். | ● பொது இடங்களில் எவ்வாறு பேச வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு கண்ணியமாகப் பேசுவார். | ● விளையாடடுக்கடை | செயற்பாடு - 1 | 73 - 75 | 2 மணி |
| | | | ● புத்தகசாலை | செயற்பாடு - 2 | 75 - 76 | 2 மணி |
| | | ● மாற்றங்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்துச் செவிமடுத்துத் துலங்குவார்.<br>● ஊடகங்களில் பேசுவதைப் போன்று தாமும் சுயமாகப் பேசுவதற்கு முன்வருவார். | ● வானொலி அல்லது தொலைக்காட்சி | செயற்பாடு - 3, 4 | 76 | 2 மணி |
| | ● தொடர்பாடலுக்காக வாசிப்பார். | ● பாடசாலைப் பெயர்ப் பலகைகளை வாசித்துப் புரிந்துகொள்வதோடு தகவல்களையும் பெற்றுக்கொள்ள முயல்வார். | ● பெயர்ப் பலகைகள் (பாட-சாலை) | .<br>செயற்பாடு - 1 | 77 | 2 மணி |
| | ● தொடர்பாடலுக்காக எழுதுவார். | ● நேர அட்டவணையில் (புகையிரத / பேருந்து) எழுதப்பட்டுள்ள இடங்களின் பெயர்கள், | ● நேர அட்டவணை (புகையிரதம் அலலது பேருந்து) | செயற்பாடு - 2 | 78 - 79 | 2 மணி |
| | | ● ஒட்டிகளின் பெயர்கள் ஆகியவற்றை வாசித்துத் தெரிந்து கொள்வார். | ● ஒட்டிகள் (லேபிள்கள்) | செயற்பாடு - 3 | 79 - 80 | 2 மணி |

| அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி-கள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | ● மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.<br><br>● மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.<br><br>● மொழியாட்சித்-திறனைவிருத்தி செய்வதற்காக வாசிப்பார்.<br><br>● மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார் | ● காட்சிப் படங்களைப் பார்த்து தமது மொழிநடையில் விபரிப்பார், எழுதுவார்.<br><br>● படங்களின் தொடர்பைக் கண்டுபிடித்துக் கதையொன்றைக் கட்டியெழுப்புவார்.<br><br>● தாம் அறிந்த பிராணிகள் / காய்கறிகள் / மரங்கள் பற்றிய சுயசரிதைகளை மொழியாட்சித்திறனை விருத்திசெய்வதற்காக முன்வைப்பார்.<br><br>● தெரிவுசெய்யப்பட்ட கொன்றைவேந்தன் அடிகளை (10 அடிகள்) மனனஞ்செய்து தெளிவாக முன்வைப்பார்.<br><br>● கிராமிய விளையாட்டுக்களை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவார்.<br><br>● பண்டிகைகள் பற்றிய அனுபவங்களை முன்வைப்பதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் தெந்துகொள்வார். | ● காட்சிப் படங்கள் / கதைப் படங்கள்<br><br>● சுயசரிதை<br><br>● கொன்றைவேந்தன் (தெரிவு செய்யப்பட்ட 10 அடிகள்)<br><br>● விளையாட்டுகள்<br><br>● கிராமிய விளையாட்டுகள் (சிறிய)<br><br>● பண்டிகைகள் | செயற்பாடு - 1,2,3,<br><br>செயற்பாடு - 4-<br><br>செயற்பாடு - 5<br><br>.செயற்பாடு - 6<br><br>செயற்பாடு -7<br><br>செயற்பாடு - 8 | 81 - 84<br><br>84 - 86<br><br>86 - 87<br><br>88 - 89<br><br>89 - 90<br><br>90 - 91 | 3 மணி<br><br>3 மணி<br><br>2 மணி<br><br>3 மணி<br><br>3 மணி<br><br>2 மணி |

# தரம் 2 - தாய்மொழி (தமிழ்)

| அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி-கள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | ● கற்றல் விருத்திக் காகச் செவிமடுப்-பார்.<br>● கற்றல் விருத்திக் காகப் பேசுவார்.<br>● கற்றல் விருத்திக் காக எழுதுவார்.<br>● கற்றல் விருத்திக் காக வாசிப்பார். | ● அன்றாட வாழ்வில் கண்ட அனுபவங்களைச் சித்திரமாக வரைந்து முன்வைப்பார் / விபரிப்பார்.<br>● சித்திரங்களைப் பார்த்து இரசித்து, கருத்துக்களை முன்வைப்பார். | ● சித்திரங்கள் | செயற்பாடு - 1 | 92 | 2 மணி |
| | | ● பார்த்த / பங்கு பற்றிய சந் தர்ப் பங்களை அல்லது நிகழ்வு களைச் சித்திரமாக வரைவதோடு அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார். | ● பங்குபற்றிய சந்தர்ப்பம் / நிகழ்ச்சி | செயற்பாடு- 2- 5 | 93 - 95 | 3 மணி |
| | | ● வரைந்த சித்திரங்கள் பங்கு பற்றிய சந்தர்ப்பம் / நிகழச்சி மற்றும் சுற்றுலா தொடர்புடைய சொற்களை எழுத முன்வருவார், வாசிப்பார். | ● சுற்றுலா | செயற்பாடு - 6,7 | 95 - 96 | 3 மணி |

36 மணித்தியாலங்கள்